1017

2 - DEC 1938
MADRAS

உ

வந்தேமாதரம்.

காந்தி — மந்திரம்

(அல்லது)

மில் தொழிலாளர் சிந்து

முதற் பாகம்

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற ஸ்ரீமான் திரிசிரபுரம் மதுரம். ம. வடிவேல்ச்சாமி கவிராயரவர்கள் மாணவராகிய

மதுரை.

எம். இ. எம். பாஸ்கர தாஸ்,

அவர்களால்

புகழ்ந்திசைக்கப்பெற்று பதிப்பிக்கப்பெற்றது.

விலை] ரிஜிஸ்டர் காப்பிரைட் [அணா 1.

உலகப்பிரசித்திபெற்ற புகழோங்கிய

மதுரை வி. கே. அன் சன்ஸ்

அவர்களால் தயாரிக்கப்பெற்ற

அர்ஜுனா
சுகந்தபாக்குத்தூள்

ஆடுதன் மார்க்கு 511 நிர். சோப்பையும்
வி. கே. தில்கூஷ் தாம்பூலத்தையும்
அர்ஜுனா பாக்குத்தூளையும் சதாகாலமும்
உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

உ

சிவமயம்

வந்தேமாதரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-DEC 1938
MADRAS

காந்தி — மந்திரம்

(அல்லது)

மில்தொழிலாளர் சிந்து.

முதற் பாகம்

வெண்பா.

உலகினிற்கோற் றிலகமதாய் உற்பவித்த நற்பொருளை
கலைமகளும் மலைமகளும் கைதொழுக-பல கலைக்கும்
முன்னிற்க. வேவந்த மூலப் பழமறையே
என்முன் நிற்கவா யிசைந்து.

வாழ்வை நம்பாதே மனமே-என்ற மெட்டு.

எத்தனை நாளுழைப்போம்—சிவமே
எத்தனை நாளுழைப்போம்

இத்தனை நாளாயுளைத்துளைத்துமில்லாமல்
என்ன சுகமடைந்தோம்
என்ன சுகமடைந்தோம்
மனமுடைந்தோம்
துயரடைந்தோம். (எ)

குத்திருமல் காசம்பித்த நோயால்வுடல்
மெத்தவே நாம் மெலிந்தோம்
மெத்தவே நாம் மெலிந்தோம்
அகந் தளர்ந்தோம்
தினம் நடந்தோம். (எ]

சித்த வைராக்ய உத்தம காந்திஜீ
இத்தப்படி நடப்போம்
சித்தப்படி நடப்போம்
தினம் படிப்போம்
கொடி பிடிப்போம் (எ)

கண் வாய் செவி மூக்கு யெல்லாம் நுளைவது
காற்றடித்த பஞ்சு
காற்றடித்த பஞ்சு
அது நஞ்சு
அதாலஞ்சி (எ)

கட்டத்துணியில்லை கஞ்சியில்லைஆதிக்
கடவுளே ஆர். வி, மில்லால்
கடவுளே ஆர், வி. மில்லால்
தொழிலேயல்லால்
அதுவுமல்லால் (எ)

இப்பெருமுத்தியோகம்
எப்பவும் நமக்குத்தானென
சதமுண்டா
தானென சதமுண்டா
எழுத்துண்டா
தொண்டுக்குத் தொண்டா (எ)

பித்தம் பிடித்த பெருவாயர்க்கு நல்ல
பெருத்த வுத்யோகம்
பெருத்த வுத்யோகம்
இனத்துரோகம்
இதுபாவம்

இத்தொழில் மாரினும் மெத்தொழிலுமிந்த
இகத்திலே யில்லையா
இகத்திலே யில்லையா
இதோர் தொல்லையா
பதிலில்லையா (எ)

உத்தமத் தலைவ ரெத்தலமில்லுக்கும்
ஒற்றுமைக்கேயுளைப்பு
ஒற்றுமைக்கேயுளைப்பு
நல்ல பிழைப்பு
தருவார் நமக்கு (எ)

உலக திலக எம் பி யம் பாஸ்கரன்
ஓதிடும் நற்கவியே
ஓதிடும் நற்கவியே
அதோர் நிதியே
அரிமதியே [எ]

கண்ணபிரானென்ன என்ற மெட்டு.

திருமதுரை ஆர். வி. மில்லில்
ஜீவனம் செய்ய நாடி
அயலூரை விட்டு ஓடி-- வந்து
தியங்குதையோ ஜனங்களெல்லாம்
கோடான நற்கோடி. [தி]

மாடு ஆடு விற்கத் தாகு
மண்டிலே யுண்டாச்சு—அதுபோல்
மனிதற்காச்சு—அந்த
மகாலோபிச் சண்டாளர்கள்
லஞ்சம் பெறலாச்சு. (தி)

ஈகை தயை தாக்ஷிண்யக்குண
மென்பதேயவர்க்கில்லே—அதால்
வரும்பெருந்தொல்லே—என்
றரியாமலே செய்கிறார்கள்
சகிக்கவொன்ணு சல்லே [தி]

கங்காணியான மேஸ்திரிகளே
கதையொன்றைக் கேளும்—நல்ல
காரியங்கள் போலும் கள்ளக்
கமிஷன் வாடிக் கைகள்
கைமுதல்தான் போலும். [தி]

உங்கள் பாட்டன்பூட்ட னிடத்தில் பெற்ற
கடனு சிறுகச் சிறுக-நாங்கள்
உழைத்தகாசில் தருக

5

அந்தப்பரமனே தருவார் கூலி
பலன்கள் மெத்தப்பெருக [தி]

இனிமேல் உங்கள் வரிசையெல்லாம்
ஏராது வீண்பேச்சு—நீங்கள்
எடுத்த கச்சி யோச்சு—இனி
இத்துடனே வாலொடிக்கி
இருந்தால் நலமாச்சு [தி]

மணி ஐந்தாக சங்கடிக்க
மனைமக்களோடெழுந்து—தலை
விரிகோலமாய்த் திரிந்து—அன்ன
ஆகாரம் புசியாமலே
அதிவிரைவாய் பரிந்து (தி)

கமிஷன் வாங்கும் மாஸ்டர்களின்
கையிருப்பு போச்சு—பெரும்
கவலைகளுண்டாச்சு—இந்தக்
காலத்திலே வரதராஜ நாயுடுவா
லிப்பேச்சு [தி]

இஞ்சினோட பஞ்சுவேலை
ஏகமாய்ச் செய்ய—பா
லுண்ணுதுமதலை நைய்யஅதை
எடுத்துப் பால்கொடுக்க நேர
மில்லா தாகுதையோ [தி]

வடித்து மிஞ்சிய கஞ்சியைக்

குழந்தை வயிற்றுக்காகப் புகற்ற—அது

உட்கொள்ளாது திகட்ட—வுயிர்

போகுந்தருணம்—மாதானவள்

ஓடியே பால் புகற்ற [தி]

டயம் கிப்பர் ரையிட்டர்களுக்கு

தலைமை உத்யோகமாச்சு—டேயப்பா

தலைகீழாகப்போச்சு—அவர்கள்

தந்திர மந்திர யிந்திர ஜாலம்

வெட்டவெளியாச்சு [தி]

வித்தகர்கள் தாழ்பணி

விவேக ஞான பாத்திரம்—ஹரி

ராமபிரான் கோத்திரம்—அதில்

விதரணையா யெம் இயம்

பாஸ்கரன் கூடல் க்ஷேத்திரம். (தி]

ஏழைக்கிரங்குமகான்
எங்கும்புகழ் வரதராஜர்
எங்கும்புகழ் வரதராஜர்
ஆலைத்தொழிளாலர்க்கே—ஞானத்தங்கமே
ஆதீனமானவரே [ஏ)

பாரதமக்களுக்காய்
பாடுபட்டுழைத்துஜெயம்
பாடுபட்டுழைத்துஜெயம்
தாரதிலே பெற்றிடவே—டோக்குத் துரைகளே
சமராசியாடினரே (ஏ]

ஒற்றுமை நிலைநாட்ட
ஒப்பந்தம் முடிவாச்சு
ஒப்பந்தம் முடிவாச்சு
எப்பவு மிது மாராது—ஞானத்தங்கமே
எழுத்தால் ரிக்கார்டுண்டாச்சு [ஏ]

இன்னுமவராலே நலமிருக்குதனேகவிதம்
சொன்ன சொற்படி நடந்தால்—தொழிலாளரே
சுருக்கில் ஜெயம்பெறலாம்
தொழிலாளரே

8

சந்திர சூரியர் போகம் என்ற மெட்டு

வந்தேமாதர மெனும்
மந்திரமே நமக்கு
வாழ்வுக்கோராதாரமே

இந்தநற்சுதந்திரம்
சொந்தமேயானல்
யாதொன்றும் வேண்டாம்.

தேசத்தலைவரான ஸ்ரீ மான்கள் யாவரும்
சிறைபுகந்தனர் வொற்றுமைப்பதற்காய்
மாசற்ற நமது பாரதமக்களான தொழிலாளரே
யாதொன்றும் மருப்புறையாதிருப்பீர்

ஒற்றுமையே நமது
முற்றும் நம் கோரிக்கை
உண்மையா மிதுவறிவீரே

திட்டமாய் நமது
சட்டளைப்படியாமே
ஜெய ஜெய பேரியடிப்போமே

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

காந்தி — மந்திரம்

(அல்லது)

மில்தொழிலாளர் சிந்து.

மூன்றும் பாகம்

கூடியசீக்கிரம் வெளிவருகிறது.

Sangeetha Chandamarutha

Mr. P M. MANIVEL (Age 21)

RAJA PART

Apply to the Following Address those who are willng to Act in the Talkies,

MARRIAPPA SAMI, Avl.,
New Kosavarpalayam, MADURA

சிடி பிரஸ், மதுரை:—38. 1000